கண்டோன்மெண்ட் பல்லவரத்தில் வருகின்ற 25.01.2025 சனிக்கிழமை அன்று கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் வீர வணக்கநாள் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ள இடத்தினை காஞ்சி வடக்கு மாவட்ட செயலாளர்-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் சென்று ஆய்வு செய்தார். உடன் பகுதி செயலாளர்கள் வே.கருணாநிதி, இ.ஜோசப்அண்ணாதுரை, த.ஜெயக்குமார், டி.பாபு, இ.எஸ்.பெர்னாட், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு.டி.பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

தி:மு.க. வர்த்தக அணி சார்பில் ஐயன் வள்ளுவர் பேரறிவு சிலை 25 ஆம் ஆண்டு வெள்ளி விழாவை ஒட்டி திருவள்ளுவர் திருவிழா நடைபெற்றது மாநில வர்த்தக அணி இணை செயலாளர் பி.டி.பாண்டி செல்வம் தலைமையில் மாநிலச் செயலாளர் காசி முத்துமாணிக்கம் மாநில துணை செயலாளர் வி.பி.மணி, மாவட்ட வர்த்தக அணி நிர்வாகிகள் என்.சிவக்குமார், ஸ்கூல் பிரகாஷ் பகுதி செயலாளர் செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற விழாவில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், கழக அமைப்பு செயலாளர் ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் கலந்து கொண்டு அய்யன் வள்ளுவர் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து திருக்குறள் சார்ந்த பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி மற்றும் வருகை தந்தவர்களுக்கும் பொது மக்களுக்கும் திருக்குறள் புத்தகங்களும் வழங்கி சிறப்பித்தனர். சட்டமன்ற உறுப்பினர் பிரபாகராஜா, தமிழன் பிரசன்னா, தா.இளைய அருணா, நா.மனோகரன், இரா. நரேந்திரன், பகுதி கழக செயலாளர் வா.பெ.சுரேஷ், லட்சுமணன், ஜெபதாஸ் பாண்டியன், மு.கோபி, வே.சிவகுமார், சண்முகம், ராஜேந்திரன், கட்டிஸ் சோமசுந்தரமூர்த்தி, லயன் தீனதயாளன், கார்த்திக், செங்குட்டுவன், செந்தில்குமார், ரமேஷ் பாபு, கேன் பார்த்திபன், ரவிக்குமார், குமரன், பிடிபி கதிரவன், சசிதரன், எஸ்.பொன்ராஜ், துரைராஜ், எம்.ஆர்.எப்.பழனி, வி.கே.ராஜ், ஜெயபாலன், பி.சேகர், கு.சுந்தர், கு.ரமேஷ், கலைச்செல்வன், என்.கிருஷ்ணன், கோவிந்தராஜ், குமார், அத்தை முனுசாமி, ஐ.சி.எப். பழனி, பாரி எல்.சீனிவாசன், ஏ.குமார், சௌந்தரபாண்டியன், மாவட்டக் கழக பகுதிக் கழக வட்டக் கழக அனைத்து அணியின் நிர்வாகிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் பங்கேற்று சிறப்பித்தனர். வட்டச் செயலாளர் காட்டன் சதீஷ், ஏ.அசோக் ஆகியோர் நன்றி கூறினர்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் – துவரவயலில்

துணை முதல்வர் பிறந்தநாள் - சமத்துவப் பொங்கல் விழா!

கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் – அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார்!

புதுக்கோட்டை, ஜன. 18- கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்டம் துவரவயல் கிராமத்தில் நடைபெற்ற நம்ம ஊர் திருவிழா என்ற சமத்துவ பொங்கல் விழாவில் ஜாதி மத பேதங்களை கடந்து அந்த பகுதி கிராமங்களில் வசிக்கும் மக்கள் ஒரே இடத்தில் சமத்துவ பொங்கல் வைத்து தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். அப்போது அங்கு நடைபெற்ற குதிரை ஆட்டம், சிலம்பாட்டம், தீப்பந்த சாகச விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகள் காண்போரை மெய்சிலிர்க்க வைக்கும் வகையில் விமர்சையாக நடைபெற்றது. இதில் 5 வயது சிறுவர் அனைவரையும் வியக்க வைக்கும் வகையில் அற்புதமாக சிலம்பம் சுற்றியது பார்வையாளர்களை பரவசப்படுத்தியது,

கழக இளைஞரணி செயலாளரும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் 47 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்டம் குன்றாண்டார் கோவில் ஒன்றியம், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்ட கவுன்சிலர் செல்வம் ஏற்பாட்டில் துவரவயல் கிராமத்தில் திமுக வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ் ரகுபதி தொடங்கி வைத்தார் .நம்ம ஊர் திருவிழா என்ற பெயரில் சமத்துவ பொங்கல் விழா மிக விமர்சையாக நடைபெற்றது.இதில் அந்தப் பகுதி கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர்கள், மதங்களைக் கடந்தும் ஜாதிகளை மறந்தும் ஒரே இடத்தில் அடுப்புகளை வைத்து பொங்கலிட்டு மகிழ்ச்சியோடு அதை படையலிட்டு சமத்துவ பொங்கல் விழாவை சகோதரத்துவத்துடன் கொண்டாடி மகிழ்ந்தனர்.

இந்த சமத்துவ பொங்கல் விழாவை முன்னிட்டு அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கிராமிய கலை நிகழ்வுகள் காண்போரை கவர்ந்தது.

இதனைக் கடந்து அங்கு நடைபெற்ற குதிரை ஆட்டம் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் சிலம்பாட்டம் காண்போரைக் கவர்ந்ததோடு ஐந்து வயது சிறுவன் ஒருவன் அற்புதமாக சிலம்பம் சுற்றி அனைவரையும் வியக்க வைத்த நிகழ்வு அங்கிருந்தவர்களை மெய்சிலிர்க்க வைத்தது.

இதேபோல் தீப்பந்தம் சுற்றும் விளையாட்டில் அப்பகுதியை சேர்ந்த இளைஞர்கள் தீப்பந்தங்களை சுற்றியதோடு வட்ட வடிவிலான தீக்குள் பாய்ந்து சென்ற காட்சி காண்பவோரை பரவசப்படுத்தியது.

மதியம் 3 மணிக்கு தொடங்கிய இந்த சமத்துவ பொங்கல் விழா இரவு 10 மணி வரை மிகவும் விமர்சியாகவும் உற்சாகத்தோடும் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் வெளிப்படுத்தும் வகையில் அனைவரும் வியக்கும் வகையில் கொண்டாடப்பட்டது அக்கிராம மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. இறுதியாக கிராம மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

நிகழ்வில் கழக விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் கே.ஆர்.என். போஸ், கழக மருத்துவ ரணி துணை செயலாளரும் விராலிமலை சட்டமன்ற தொகுதி பார்வையாளருமான டாக்டர் அஞ்சுகம் பூபதி,

மாவட்ட துணைச் செயலாளர் பெ.ராஜேஸ்வரி, ஒன்றிய செயலாளர்கள் என்.சேட்டு, ஓ.எஸ்.வெங்கடாசலம், சி.சண்முகம், தவ.பாஞ்சாலன், கே.எஸ். சந்திரன், வெ.முத்து கிருஷ்ணன், மு.பி.ம.சத்தியசீலன், மா.தமிழ் அய்யா, ஆர்.ஆர்.சாமிநாதன், பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம்.பழனியப்பன், கீரனூர் நகர செயலாளர் பிஅண்ணாதுரை, டி. செல்வம், எம்.செந்தில்குமார், கை.பழனிச்சாமி,

மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளரும் புட்டுக்கோட்டை சட்டமன்ற தொகுதி பார்வையாளருமான முனைவர் சி.குறிஞ்சிவாணன், கீரனூர் பேரூராட்சி தலைவர் கே.எம். கே.ரவிக்குமார், துணை தலைவர் எம்.ஏ.எம்.இம்தியாஸ், மாவட்ட பிரதிநிதி பி.சி.என்.கண்ணன்

மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் வி. என்.எம்.பாலமுருகன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வி.ஜி.ஆர்.மணி வண்ணன், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் இளைஞரணி மு.கலைஞர் கருணாநிதி, விளாப்பட்டி சிவா, இலக்கிய அணி ஓ.ஆறுமுகம், தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் டி.முரளிதரன், எழில் ராஜா, தமிழினியன் உள்ளிட்ட ஒன்றிய கிளை கழக நிர்வாகிகள் மற்றும் ஆயிரக்காணக்கான பொதுமக்கள் பங்கேற்று சிறப்பித்தனர் மற்றும் ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

கரூர் – குளித்தலை இராச்சாண்டர் திருமலையில்

பொங்கல் திருநாள் - ஜல்லிக்கட்டு போட்டி!

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி துவக்கி வைத்து பேச்சு!

கரூர், ஜன.18- கரூர் மாவட்டம் ஆர்.டி. மலையில் ஜல்லிக்கட்டுப் போட்டியை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி கொடியசைத்து துவக்கி வைத்தார். சிறந்த காளை உரிமையாளருக்கு கார் பரிசு, சிறந்த மாடுபிடி வீரருக்கு பைக் பரிசு வழங்கினார்.

கரூர் மாவட்டம். குளித்தலை வட்டம் இராச்சாண்டர் திருமலையில் பொங்கல் திருநாளை முன்னிட்டு ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல் தலைமை வகித்தார். மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி ஜல்லிக்கட்டு போட்டியை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி கூறுகையில், "முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் விவசாயிகளின் நலன் காக்கும் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்யும் விதமாகவும். விவசாயிகள் தங்களுடைய கால்நடைகளை போற்றும் விதமாகவும் பொங்கல் திருநாளாம் தமிழர் திருநாளையொட்டி குளித்தலை வட்டம் இராச்சாண்டர் திருமலையில் 63 வது ஆண்டு ஜல்லிக்கட்டு போட்டி நடத்தப்படுகிறது.

இன்றைய ஜல்லிக்கட்டுப் போட்டியில் 770 காளைகளும். 400 மாடுபிடி வீரர்களும் அரசு விதிமுறைகளின்படி பதிவு செய்து பங்கேற்றுள்ளனர். முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சார்பாக சிறந்த காளைக்கு கார் பரிசாகவும். சிறந்த மாடுபிடி வீரருக்கு இரு சக்கர வாகனம் பரிசாகவும் வழங்கப்பட உள்ளது.

ஜல்லிக்கட்டுப் போட்டியில் பங்கேற்கும் மாடுபிடி வீரர்கள். பார்வையாளர்கள் மற்றும் காளைகளுக்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக அனைத்து அடிப்படை வசதிகளும் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது" என்று அமைச்சர் தெரிவித்தார். முன்னதாக அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில் மாடுபிடி வீரர்கள் அனைவரும் ஜல்லிக்கட்டு விதிமுறைகள் குறித்து உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இவ்விழாவில் குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கா. பெரோஸ் கான் அப்துல்லா, மாவட்ட வருவாய் அலுவலர் ம. கண்ணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் ஸ்ரீலேகா தமிழ் செல்வன், குளித்தலை சார் ஆட்சியர் திருமதி.தி சுவாதி ஸ்ரீ. இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்பு) மரு.சாந்தி ஜல்லிக்கட்டு போட்டி குழுவினர் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஜல்லிக்கட்டு போட்டியில் மதுரை மாவட்டம் காளை உரிமையாளருக்கு கார் பரிசும், சிறந்த மாடுபிடி வீரர் பரிசு நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த வீரருக்கும் அமைச்சர் செந்தில் பாலாஜி வழங்கினார்.

மதுரை மாவட்டம், செக்காரனியூர் கதிரவனின் காளை சிறந்த காளையாக தேர்ந்தெடுக்கப்பட்டு கார் பரிசளிக்கப்பட்டது.

காளைகளை பிடித்த சிறந்த மாடுபிடி வீரருக்கான இரு சக்கர வாகனம் பரிசு நாமக்கல் மாவட்டம் எருமைப்பட்டியை சேர்ந்த கார்த்திக் என்பவருக்கு அமைச்சர் செந்தில் பாலாஜி வழங்கினார்.



கோவை வடக்கு மாவட்டம் சர்க்கார் சாமக்குளம் ஒன்றிய தி.மு.க மற்றும் வெள்ளானைப்பட்டி ஊராட்சி தி.மு.க சார்பில், தமிழ்நாடு துணை முதலமைச்சர், இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை சிறப்பிக்கும் வகையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார் கோவை வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தொ. அ.ரவி முன்னிலையில் ஒன்றிய கழக செயலாளர் எஸ்.பி.சுரேஷ்குமார் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கோவை பாராளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார், கவுண்டம்பாளையம் தொகுதி பொறுப்பாளர் மூலனூர் கார்த்திக், பொள்ளாச்சி சித்திக், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.பி.சுப்பிரமணியன், மாவட்ட துணை செயலாளர் அசோக் பாபு ,கலை இலக்கியப் பகுத்தறிவு அணி செல்வராஜ், முன்னாள் எம்பி நாகராஜ், விவசாய அணி ராஜகோபால், இளைஞரணி மாவட்டத் துணை அமைப்பாளர் மனோஜ், கிளைச் செயலாளர்கள் கோவிந்தராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், சர்க்கார்சாமகுளம் ஒன்றிய கழக நிர்வாகிகள் திரளானோர் கலந்து கொண்டனர்.

முதல்வர் – துணை முதல்வர் வருகை! அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில்

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி - மாணவர் அணி ஆலோசனைக் கூட்டம்!

அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ் – எல்.பிரபு அறிக்கை!

சென்னை, ஜன.18- மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி. பிரகாஷ், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பேராசிரியர் எல். பிரபு ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி மற்றும் மாணவர் அணி மாவட்ட ஒன்றிய பகுதி நகர பேரூர் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்களின் கவனத்திற்கு

வருகின்ற ஞாயிற்றுக் கிழமை (19.01.2025) காலை 9 மணியளவில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் த.மோ.அன்பரசன் தலைமையில் மாவட்ட பகுதி ஒன்றிய நகர பேரூர் இளைஞர் அணி - மாணவர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலகம், கத்திபாரா ஜோதி தியேட்டர் அருகில் நடைபெற உள்ளது.

எனவே இளைஞர் அணி, மாணவர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

பொருள்: 1. வருகின்ற 25.01.2025 சனிக்கிழமை மாலை 5:00 மணிக்கு , கழக தலைவர் - முதலமைச்சர் தளபதி அவர்கள் பல்லாவரத்தில் நடைபெறும் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் பங்கேற்பது குறித்து.

2. வருகின்ற 20.01.2025 காலை நடைபெறும் திரும்பெரும்புதூர் வடக்கு ஒன்றிய செயலாளர் - ஒன்றிய பெருந்தலைவர் அவர்களின் இல்ல திருமணத்திற்கு வருகை தரும் கழக இளந்தலைவர் துணை முதல்வர் அவர்களின் வருகை குறித்து.

இவ்வாறு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் மற்றும் மாணவர் அணி அமைப்பாளர் பேராசிரியர் எல். பிரபு தெரிவித்துள்ளனர்.

பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா திருமயம் ஒன்றிய தி.மு.க. சார்பில் திருமயம் பேரூர் பகுதிகளில் கழகக் கொடியேற்றும் நிகழ்ச்சி மற்றும் பெரியார் நினைவு சமத்துவபுரம் ஒன்றிய தி.மு.க. அலுவலகம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவில் தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி கழக கொடியினை ஏற்றி வைத்து மற்றும் சமத்துவப் பொங்கலிட்டு சிறப்பித்தார்கள். உடன் ஒன்றிய கழக செயலாளர்கள் ஆறு. சிதம்பரம், இரா.கணேசன், அணி அமைப்பாளர்கள் இரா.மேகநாதன், தேவி, கே.ஆர்.ராமசாமி, சுப.துரைராஜா, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.